

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம் கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் பொது விநியோக திட்ட அங்காடி புதிய கட்டடத்தினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார். உடன் முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், ஒன்றியச் செயலாளர்கள் கூகூர் சி.அம்பிகாபதி, சுந்தர. ஜெயபால், சரவணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் செல்வம், ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட அலுவலர் (கட்டமைப்பு).செந்தில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் க.முருகேசன், என்.காந்திமதி மற்றும் பலர் உள்ளனர்.

### கரூரில் கழக முப்பெரும் விழா

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! செந்தில் பாலாஜி அறிவிப்பு!

கரூர், செப்.15 –

கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவிற்கு கரூர் மாவட்டம் வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்கள். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது என மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது என மாவட்ட செயலாளர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் கரூர் மாவட்ட கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) மாவட்ட அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

செப்.17ம் தேதி கழக முப்பெரும் விழாவை கரூரில் பிரம்மாண்டமாக நடத்துவது குறித்த பணிகள் நடைபெற்று வருகின்றன. விழாவை திருப்பு முனை மாநாடாக நடத்துவது குறித்து நிர்வாகிகளின் கருத்துக்களைக் கேட்டு வி.செந்தில்பாலாஜி ஆலோசனை நடத்தினார். கூட்டத்தில் நிறைவேற்ற ப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

17.09.2025 அன்று கரூரில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், வரவேற்று கரூர் மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பு



அளிப்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

செப் 15 ல், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று ஓரணியில் தமிழ்நாடு வாக்குச்சாவடி அளவிலான உறுதிமொழி முன்மொழிவுக் கூட்டங்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் மைதானங்கள், திருமண மண்டபங்களில் ஓரணியில் தமிழ் நாடு முன்னெ டுப்பில் இணைந்த குடும்பங்களை அழைத்து ‘என் வாக்குச்சாவடி, வலிமையான வாக்குச்சாவடி’ என்பதை உணர்த்திடும் வகையில் அந்தந்த வாக்கு சாவடிக் குட்பட்ட பகுதிகளில் மாநிலமாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றியநகரபகுதி பேரூர் கழக நிர்வாகி கள் சார்பு அணியினர் கட்டாயம் கலந்து கொண்டு ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள் கூடி மண்மொழி மானம் காப்பதற்கான உறுதிமொழியை முன்மொழிய வேண்டும் என இக்கூட்டம் தீர்மா னிக்கிறது.

கரூர் மாவட்ட திமுக சார்பில் 20.09.2025 அன்று மாலை 6.00 மணிக்கு கரூர் 80 அடி சாலையில் கரூர் மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்களு டன் பொதுக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்பொறுப்பாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், பிஎல்ஏ2, பிடிஏ, பிஎல்சி,. பூத் நிர்வாகிகள், இளைஞர் அணி, பூத் மகளிர் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கூட்டத்தில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறு பான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே. பல்லவிராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி. ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் துணை செயலாளர்கள், எம். எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம். துரைராஜ், கே.சுப்பிரமணி, என். செல்வராஜ், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி. சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டே ஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ். காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்தி வேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகர செயலாளர் எஸ். பி.கனகராஜ், பகுதி செயலாளர்கள் க.சுப்பிரமணியன், ஆர்.எஸ்.ராஜா, ஆர்.ஜோதிபாசு, வி.ஜி.எஸ்.குமார், வெங்கமேடு பாண்டியன், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ். மணியன், என்.மணிகண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி.வளர்மதி, வி.கே.வேலுச்சாமி, ப.முத்துக்குமார், எம்.ரகுநாதன், கே.பாஸ்கரன், கே.ரவிராஜா, எம். ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், சி.கதிரவன், எல்.கரிகாலன், அ.சந்திரன், ப.தியாகராஜன், இ. ராமர் (முன்னாள் எம்எல்ஏ), ஜி. அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகலூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் செயலாளர்கள் க.முரளிராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ், எம்.சசிக்குமார், ஆர். மோகன்ராஜ், ம இ.ரவீந்திரன், எம். முத்து (எ) சுப்பிரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாகரத்தினம், பி.காமராஜ், கீதா மணிவண்ணன், எஸ்.காமராஜ், ஏ.அறிவழகன். ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தீர்மானங்களை விளக்கி சிறப்புரை!

*தஞ்சாவூர், செப்.15 -*

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் தஞ்சாவூர் மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் அவைத்தலைவர் சி.இறைவன் தலைமை வகித்தார். ச.முரசொலி தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி. அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் தஞ்சை மாநகரச் செயலாளர் - மேயர் சண்.இராமநாதன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மருத்துவர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

1. கழகத் தலைவர், திராவிட நாயகர் அவர்களின் ஆணைக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு முழக்கத்தை. ஒவ்வொரு இல்லத்திலும் ஒலிக்க வைத்து உறுப்பினர் சேர்க்கையில் மாபெரும் வெற்றி வாகை சூடிய தஞ்சை மத்திய மாவட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பி.எல்.ஏ 3, பி.எல்.சி, மற்றும் பி.டி.எ ஆகியோருக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்

2. ஒரு வார காலம் ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு 15,516 கோடி மதிப்பீடுகள் மூலம் 17,613 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்து தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி புரட்சிக்கு வித்திட்ட திராவிட நாயகர் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அப்பயணத்திற்கு உறுதுணையாக ஒருங்கிணைத்து வெற்றிகரமாக நடத்திய தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்கும் இக்கூட்டத்தின் வாயிலாக பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறோம்.

3. உலக அரங்கில் பெரியாரை முன்னெடுக்கும் முகமாய் 1000ம் ஆண்டு பழமையான உலகின் முதன்மையான ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் தந்தை பெரியாரின் திருவுருவ படத்தை பெரியாரின் பேரனாக திறந்த வைத்து சிறப்புரையாற்றிய கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

4. கழகத்தலைவர் ஆணைக்கினங்க செப்டம்பர் 15 ல் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் மண், மொழி, மானம் காக்க மத்திய மாவட்டம் முழுவதும் உள்ள 896 வாக்குச்சாவடிகளிலும் கூட்டம் நடத்தி உறுதிமொழி எடுப்பது என இக்கூட்டத்தின் சார்பில் தீர்மானிக்கப்படுகிறது.

5. வருகின்ற 2026 தேர்தலை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்தித்துவரும் கழக இளந்தலைவர் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

6. வருகின்ற செப்டம்பர் 17 ல் கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பேராசிரியர் விருது, மு.க.ஸ்டாலின் விருது மற்றும் முரசொலி அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் முரசொலி செல்வம் விருது, போன்ற விருதுகளை கழக நிர்வாகிகளுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றோம்.

7. செப்டம்பர் 17 அன்று கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவிற்கு தஞ்சை மத்திய மாவட்ட கழகத்தின் சார்பில் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என இக்கூட்டத்தின் சார்பில் தீர்மானிக்கப்படுகின்றது.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.



தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் தி.மு.க. கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா,முப்பெரும் விழா உள்ளிட்ட கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். உடன் முன்னாள் மாவட்ட கழக செயலாளர்கள் தடங்கம்.பெ. சுப்ரமணி, பி தர்மச்செல்வன், தர்மபுரி தொகுதி பார்வையாளர் டி செங்குட்டுவன், நகர கழக செயலாளர் நாட்டான் மாது மற்றும் மாநில,மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழகத்தினர், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட திமுகவினர் கலந்து கொண்டனர்.





ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் கொடுமுடி ஒன்றியத்தில் கிளாம்பாடி பேரூராட்சியில் விவசயிகளிடமிருந்து வந்த நீண்ட நாள் கோரிக்கையான மின்சார துறையில் புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்து அதை கே.இ.பிரகாஷ் எம்.பி. கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள், மின்சாரத்துறை அதிகாரிகள் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

### மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

# கரூர் முப்பெரும் விழாவில் பெரும் திரளாக கலந்து கொள்வது என தீர்மானம்!

## அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மாவட்ட செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

*மயிலாடுதுறை, செப். 15 -*

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் விஜய் திருமண மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே. ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்

குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்து மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பிறப்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார். கூட்டத்தில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், தொகுதி பார்வையாளர்களான மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்து. மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், பொதுக்குழு உறுப்பினர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், பி.சிவதாஸ், எஸ்.சங்கரநாராயணன், அ.காந்தி, நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், எம்.பி.கென்னடி, சுபாநெடுஞ்செழியன் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்லசேது.ரவிக்குமார், என். இளையபெருமாள், மலர்விழிதிருமாவளவன், மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம்.சங்கர், ஞான.இமையநாதன், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், பஞ்சு. குமார், கு.வைத்தியநாதன், அமிர்த.விஜயகுமார், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ம.சுப்ராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், எஸ்.கே.முத்துராஜா, என்.அண்ணாதுரை மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, காழி ஆர். கலைவாணன், இரா. மனோகரன், பெரு.வீரமணி, டி.ராஜ்குமார், வெடி எஸ்.பாலமுருகன், ஆர்.எஸ்.ஶ்ரீதர், க.அறிவுசெல்வன், வி.எஸ்.பிரபாகர், மாவட்ட விவசாய அணிதுணைஅமைப்பாளர் பரிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க 7 நாள் அரசு முறை பயணமாக சென்று தமிழ்நாட்டிற்கு ரூ. 15,516 முதலீடுகளை ஈர்த்து அதன் பயனாக 17,613 தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கிய கழகத்தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுகளை தொிவித்துக் கொள்வது என்றும், தந்தை பெரியார் பிறந்த நாள், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், கழகம் தோன்றிய நாள் என முப்பெரும் விழாவாக தலைமைக் கழகத்தால் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வரகிறது. இந்த ஆண்டு கரூரின் நடைபெறும் முப்பெரும் விழாவில் கழக நிர்வாகிகள், கழகத்தினர் பெரும் திரளாக கலந்து கொள்வது எனவும், லண்டனில் உள்ள புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகலாக அடிமை படுத்தப்பட்ட மக்களின் காவலாக விளங்கிய சுயமரியாதை சுடரொலி தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து வரலாற்று சிறப்பு மிக்க உரையாற்றிய கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வது என்றும், செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள், செப்டம்பர் 17 அண்ணா பிறந்த நாற்கள் அன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அண்ணா, பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திடுவது என்றும், மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகள், வார்டுகள் தோறும் அண்ணா, பெரியார் திருஉருவப் படத்தை வைத்து மரியாதை செலுத்திட வேண்டும் என்றும், கழகத்தலைவர் ஆணைக்கினங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் ஓரணியின் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக பணியாற்றி கொண்டு வரும் அனைத்து கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள், பாக நிலை உறுப்பினர்கள், டிஜிட்டல் முகவர்கள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் அனைவருக்கும் மாவட்டக் கழகம் சார்பில் நன்றியையும், பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வது என்றும், தலைமைக் கழக அறிவுறுத்தலின் படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை கழகம், வார்டு கழகம் தோறும் பொது உறுப்பினர்கள் கூட்டத்தை சிறப்பாக நடத்திட வேண்டும் என்றும், இந்த கிளை, வார்டு கழக கூட்டத்தை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஏற்பாடு, ஆலோசனைகளை வழங்கி தீர்மானங்களை நிறைவேற்றி அந்த தீர்மான புத்தகம் தலைமை கழகத்திற்கு அனுப்பி வைத்திட மாவட்டக் கழகத்திடம் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வழங்கிடுவாதோடு அந்தந்த பகுதியை சேர்ந்த கழக நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்றும், செப்டம்பர் 15ம் தேதி அன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பூத்களிலும் கழக நிர்வாகிகள், ஓராணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் இணைந்த குடும்பங்களை கூட்டி மண், மொழி, மானம் காப்பதற்கான உறுதி மொழியை ஏற்றிட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் பன்னாட்டுத் தமிழ் ஆளுமையாளர்கள் கூட்டமைப்பு சார்பில் வரலாற்று சிறப்புமிக்க ஆணைகளை வழங்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, ஆய்வு நூலை வெளியிட்டு விழா, ஆளுமை ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் விழா என முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே. ஆர்.என். இராஜேஸ்குமார், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு விருதுகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கினர். விழாவில் ராசிபுரம் நகர் மன்ற தலைவர் முனைவர் ஆர். கவிதா சங்கர். நாமகிரிப்பேட்டை ஒன்றிய கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.இராமசுவாமி, மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் டாக்டர் இரா. மாயவன், மாற்றுத்திறனாளி மாநில தலைவர் ரெ. தங்கம், நாமக்கல் நாவுக்கரசு பன்னாட்டு தமிழ் ஆளுமைகள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் பொன். கதிரேசன், மற்றும் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.